கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - அக்டோபர் 25, 2026

Fortnightly E-paper ● October 25, 2026



பரிதாபத் தற்கொலையும் ஆணவப் படுகொலைதான்!

சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - அக்டோபர் 25, 2026 Fortnightly E-paper ●October 25, 2026

பரிதாபத் தற்கொலையும் ஆணவப் படுகொலைதான்!

சுப.வீரபாண்டியன்

அண்மையில் கோவை பீளமேடு பகுதியைச் சேர்ந்த அகிலன் என்னும் 15 வயது மாணவன் தற்கொலை செய்து கொண்டு இறந்து போயிருக்கிறான்!

"மாட்டுக்கறி சாப்பிடுகிறவனா நீ?" என்று ஆசிரியர் வகுப்பறையில் கேட்க, ஆம் என்று அவன் சொன்னதும், மற்ற மாணவர்கள் சிரிக்க, மனம் உடைந்து போன அகிலன் தன் வீட்டிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு இறந்திருக்கிறான்!

ஆம், மாட்டுக்கறி தான் உண்கிறேன், அதில் என்ன குற்றம் அல்லது இழிவு என்று திருப்பிக் கேட்கிற அளவுக்கு அந்தச் சிறுவனுக்கு போதுமான வயதும், துணிவும் இல்லை!

அவன் இறந்த பிறகு, கடந்த 23 ஆம் தேதி அவன் பெற்றோர்களும், முற்போக்கு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் சிலரும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்!

இனிமேல் தங்கள் மகன் திரும்பக் கிடைக்க மாட்டான் என்பது உறுதி என்றாலும், நீதியாவது கிடைக்குமா என்று பெற்றோர்கள் அல்லல் படுகின்றனர்! பீளமேடு பகுதியில் உள்ள கே.கே நாயுடு பள்ளியைச் சேர்ந்த அந்த ஆசிரியரும், அதற்குப் பொறுப்பான மற்றவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டால்தான், இனி மற்றவர்களுக்கு ஒரு சிறு அச்சமாவது ஏற்படும்!

ஆனால் தமிழ்நாடு அரசு செயலற்று நிற்கிறது! அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடும் கண்டனத்தைத் தெரிவித்த பிறகும், பெரிதாக அங்கு எந்த அசைவும் ஏற்படவில்லை!

சாதியை மறுத்து, காதல் திருமணம் செய்து கொள்ளும்



“கொன்றால் மட்டுமே அதற்குக் கொலை என்று பெயர் இல்லை! தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவதும் அதற்கு நிகரானதுதான்!”

இளம்பிள்ளைகள் ஆங்காங்கு வெட்டிக் கொல்லப்படும் கொடூரத்தை நாம் பார்க்கிறோம்! அதனை ஆணவப் படுகொலை என்கிறோம்.


கொன்றால் மட்டுமே அதற்குக் கொலை என்று பெயர் இல்லை! தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவதும் அதற்கு நிகரானதுதான்!

எனவே இவை போன்ற பரிதாபத் தற்கொலைகளையும், ஆணவப் படுகொலைகளாகவே கருதி, அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

●

காரைக்காலில் நூல் திறனாய்வுக் கூட்டம்













இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் 10-10-2026 அன்று காரைக்கால் 'சேம்பர் ஆஃப் காமர்ஸ் ஹாலில்' நூல் திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் இளங்கோ தலைமை வகித்தார். தோழர் திராவிட மங்கை முன்னிலை வகிக்கத், தோழர் ஆர்.இலட்சுமணன் வரவேற்புரையாற்ற, தோழர் ஏ.எம்.எச். நாஜிம் தொடக்கவுரையாற்றினார்.

திருச்சி சிவாவின் 'காட்சியும் கருத்தும்' என்ற நூல்குறித்துப் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தன் திறனாய்வை வழங்கினார். வழக்கறிஞர் இளஞ்சித்திரன் கலைஞரின் 'இளைஞர்களுக்கு வழிவிடுவோம்' என்ற நூல் குறித்தும், பேராசிரியர் சீ.அகிலா 'தமிழின் சமவுரிமைக்கானப் போராட்டம்' என்ற நூல் குறித்தும் திறனாய்வு செய்தனர். தோழர் க.கலைமாறன் நன்றி உரையுடல் கூட்டம் நிறைவுபெற்றது.

கடலூரில் பகுத்தறிவுப் பெருவிழா



கடலூர் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாகப், பேராசிரியர் இரா.ச.குழந்தைவேலனார் தமிழ்ப்பணி அறக்கட்டளையின் 'பகுத்தறிவுப் பெருவிழா ' கடலூர் ஈதல் அரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 'நாடும் அரசும்' என்ற தலைப்பில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.









கோவையில் பயிற்சி வகுப்பு

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, கோவை மாவட்டம் சார்பாக 20-11-2026 அன்று, மாவட்டத் திமுக தலைமை அலுவலகத்தில் 'திராவிடவியல் பயிற்சி வகுப்பு' நடைபெற்றது.

இவ்வகுப்புக் கூட்டத்தில் "பகுத்தறிவும் சமூகநீதியும்" என்ற தலைப்பில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்களும், "திராவிட இயக்க மும் மொழிப்போராட்டமும்" என்ற தலைப்பில் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களும் பயிற்சி வகுப்பு எடுத்தனர். இப்பயிற்சி வகுப்புக்கு பேரவைப் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு அவர்கள் தலைமை தாங்கினர். ப.கௌதம் வரவேற்புரை ஆற்ற, திமுக மாநகர் மாவட்டச் செயலாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் தொடக்கவுரையாற்ற, மா.கணேசமூர்த்தி நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் ஆவை.கோபிநாத் நிகழ்ச்சி ஏற்பாட்டைச் செய்திருந்தார்.





